<u>இராசிபுரம் நகராட்சி</u>

<u>நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு</u>

2023–ஆம் வருடம் ஜூலை மாதம் 31–ஆம் தேதி திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி<br>நாள் : 26.07.2023

தலைவர்,<br>நகர் மன்றம்.

<u>பொருள்கள்</u>

( 1 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதியிலுள்ள வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. இணைப்பு வழங்கப்படாத வீடுகளிலிருந்து வரும் கழிவு நீர் தற்போது தட்டான்குட்டை ஏரியில் சென்றடைகிறது. மேற்படி ஏரியில் கலப்பதால் சுற்றுச்சூழல் மாசு அடைவதாக சந்திரசேகரபுரம் ஊராட்சி மன்றத் தலைவரால் NGT-இல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. எனவே, மேற்ப்படி கழிவுநீரை Interception and diversion method மூலம் மாற்றுப்பாதை அமைத்து மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.00 இலட்சத்திற்கு நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) மேற்ப்படி பணிக்கான செலவினை நகராட்சி பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2647/23/இ2)

**தீர்மானம் எண். 408**

அங்கீகரிக்கப்பட்டது.

( 2 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட Interception and diversion method மூலம் மாற்றுப்பாதை அமைத்து மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ. 2.00 இலட்சம் மதிப்பீட்டிலான குடிநீர் நிதிப் பணிக்கு 04.07.2023–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர் – 0.52 % மதிப்பீட்டை விட அதிகம்
2) திருமதி ஆர். ஷாகிதா, ஒப்பந்ததாரர் – 0.08 % மதிப்பீட்டை விட குறைவு

மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திருமதி ஆர். ஷாகிதா, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மதிப்பீட்டைவிட குறைவான 0.08 ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி ஆர். ஷாகிதா ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2647/23/இ2)

**தீர்மானம் எண். 409**

அங்கீகரிக்கப்பட்டது.

( 3 ) கல்வி நிதியின்கீழ், இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 13 செம்மலைத் தெருவில் அமைந்துள்ள நகராட்சி தொடக்கப் பள்ளியில் பழுதடைந்த மேற்க்கூரையை அகற்றிவிட்டு புதியதாக மேல்தளம் அமைத்தல் பணி ரூ. 14.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 10.07.2023–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1. திரு ஹரி கன்ஸ்ட்ரக்ஷன் – 0.06 % மதிப்பீட்டை விட குறைவு
2. திரு முருகன் கன்ஸ்ட்ரக்ஷன் – 0.43 % மதிப்பீட்டை விட அதிகம்

மதிப்பீட்டைவிட குறைவான 0.06% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஹரி கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மதிப்பீட்டைவிட குறைவான 0.06% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஹரி கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(394/23/இ1)

**தீர்மானம் எண். 410**

அனுமதிக்கப்பட்டது.

( 4 ) கல்வி நிதியின்கீழ், இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 19 காட்டூர் சாலையில் அமைந்துள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியின் கட்டடங்களின் பழுதடைந்த மேற்க்கூரையை அகற்றிவிட்டு புதியதாக மேல்தளம் அமைத்தல் மற்றும் வகுப்பறைகளுக்கு டைல்ஸ் மற்றும் வர்ணம் பூசும் பணி ரூ. 17.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்க்கொள்ள 10.07.2023–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1. திரு ஹரி கன்ஸ்ட்ரக்ஷன் – 0.12 % மதிப்பீட்டை விட அதிகம்
2. திரு முருகன் கன்ஸ்ட்ரக்ஷன் – 0.04 % மதிப்பீட்டை விட குறைவு

மதிப்பீட்டைவிட குறைவான 0.04% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு முருகன் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மதிப்பீட்டைவிட குறைவான 0.04% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு முருகன் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(393/23/இ1)

**தீர்மானம் எண். 411**

அனுமதிக்கப்பட்டது.

**( 5 )** கல்வி நிதியின் கீழ், இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட இரங்கப்பன் தெருவில் அமைந்துள்ள நகராட்சி தொடக்கப்பள்ளியின் கட்டடங்களின் பழுதடைந்த மேற்க்கூரையை அகற்றிவிட்டு புதியதாக மேல்தளம் அமைத்தல் மற்றும் வகுப்பறைகளுக்கு டைல்ஸ் மற்றும் வர்ணம் பூசும் பணி ரூ. **15.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள **10.07.2023–**இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| **1.** திரு ஹரி கன்ஸ்ட்ரக்ஷன் | – | **0.02** %மதிப்பீட்டை விட குறைவு |
| **2.** திரு முருகன் கன்ஸ்ட்ரக்ஷன் | – | **1.36** % மதிப்பீட்டை விட அதிகம் |

மதிப்பீட்டைவிட குறைவான **0.02%** ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஹரி கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான **0.02%** ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஹரி கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(395/23/இ1)**

**தீர்மானம் எண். 412**

அனுமதிக்கப்பட்டது.

**( 6 )** இந்நகராட்சி பொறியியல் பிரிவு வாகன எண். TN 28 CZ 6111**–**க்கான இரண்டாவது இலவச சர்வீஸ் செய்வதற்கான செலவுத் தொகை ரூ. **7210/–**ஐ திரு ப. சீரங்கன், ஓட்டுநர் அவர்களால் செலவு செய்யப்பட்டதால், மேற்ப்படித் தொகையை திரும்ப நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(3602/23/இ2)**

**தீர்மானம் எண். 413**

அங்கீகரிக்கப்பட்டது

**( 7 )** இராசிபுரம் நகராட்சி ஆண்டுக் கணக்குகள் 2022–23–ஆம் ஆண்டிற்கான பொது நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி கணக்குகள் இணையதளத்தில் தயார் செய்து வழங்கும் பணிக்கு **13.07.2023–**இல் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு.

1. Thiru K. Lalith JK Systems,Uthangarai - Rs. 70,000/-
2. Thiru R. Dhamodharan RR Computers,Uthangarai - Rs. 65,000/-
3. Thiru J. Krishnamoorthi Consultant,Uthangarai - Rs. 60,000/-

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ. **60000/–** குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு ஜெ. கிருஷ்ணமூர்த்தி விலைப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு ஜெ. கிருஷ்ணமூர்த்தி விலைப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1353/23/பி1)**

**தீர்மானம் எண். 414**

அனுமதிக்கப்பட்டது.

**( 8 )** இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரம் "ஈ" பிரிவில் வீடு வீடாக திடக்கழிவுகளை சேகரிக்க பயன்படுத்தப்பட்டு வரும் மின்கலன் வாகனங்களில் பழுது நீக்குதல் பணிக்கு **08.05.2023**–இல் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

**1.** Peri Electronics Alangulam, Madurai - ரூ. **40,710**/-
2. Adroil Electronics, Salem road , Rasipuram - ரூ.**36,757/–**

குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள Adroil Electronics, Salem road, Rasipuram என்பவரது குறைவான விலைப்புள்ளி ஏற்று நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(1910**/23/எச்**1)**

**தீர்மானம் எண். 415**

அங்கீகரிக்கப்பட்டது

**( 9 )** தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு இராசிபுரம் நகராட்சி பங்குத் தொகை **2023**-2024-ஆம் ஆண்டிற்கு ரூ. **75000**/- செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(3361/23/சி1)**

**தீர்மானம் எண். 416**

அங்கீகரிக்கப்பட்டது

( 10**)** இராசிபுரம் நகராட்சி நகரமைப்பு பிரிவின்மீது இடம் அளத்தல் தொடர்பாக பிலடெல்பியா பூரண சுவிசேவு சமூக சேவை நிறுவனம் என்பவரால் வழக்கு (W.P.NO. 12572 OF 2023) தொடரப்பட்டது. அது தொடர்பாக இந்நகராட்சி சார்பாக ஆஜராகிய திரு பி. ஸ்ரீனிவாஸ், அட்வகேட், சென்னை அவர்கள் அட்வகேட் கட்டணம் ரூ. **18000**/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

நகர்மன்றத் தலைவர் அவர்களின் **18105**/2023-ஆம் தேதியில் முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றம் அனுமதிக்கலாம்.

**(2064/23/எப்1)**

**தீர்மானம் எண். 417**

அனுமதிக்கப்பட்டது

**( 11 )** இராசிபுரம் நகராட்சிக்கு சுற்றுலா இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி **6–**ஆவது மாநில நிதிக்குழு **2023–24** திட்டத்தின் கீழ் சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ரூ. **96.00** இலட்சத்தில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணி விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட தேரடி தெரு, வி நகர் ரோடு எண். 11, திருவேங்கட விலாஸ் பள்ளி தெரு, சின்ன கடை வீதி ஆகிய சாலைகளில் தார் சாலை புதுப்பித்தல். | ரூ. 96,00,000/– |

மேற்க்காணும் சாலைப் பணிகளின் அவசியம் கருதி, நகராட்சி நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு மேற்க்காணும் சாலைப்பணிகளுக்கு சுற்றுலா துறை **6–**ஆவது மாநில நிதிக்குழு **2023–24** திட்டத்தின்கீழ் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கக் கோரி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று சுற்றுலா அலுவலர், மாவட்ட ஆட்சியரக இணைப்பு கட்டிடம், நாமக்கல் அவர்களுக்கு திட்ட முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

சாலைப்பணிகளின் அவசியம் கருதி, நகராட்சி நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு மேற்க்காணும் சாலைப்பணிகளுக்கு சுற்றுலா துறை **6–**ஆவது மாநில நிதிக்குழு **2023–24** திட்டத்தின்கீழ் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கக் கோரி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று சுற்றுலா அலுவலர், மாவட்ட ஆட்சியரக இணைப்பு கட்டிடம், நாமக்கல் அவர்களுக்கு திட்ட முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(2887/23/இ1)**

**தீர்மானம் எண். 418**

அங்கீகரிக்கப்பட்டது

**( 12 )** இராசிபுரம் நகராட்சிக்கு நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி (15CFC **Un Tied Grant**) **2023–** 24 திட்டத்தின்கீழ் சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ரூ. **29.00** இலட்சத்தில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | பணி விவரம் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1) | Providing BT Road at S.S. salai main -9 cross - 1 (053003R077), S.S. salai main -11 cross 2 (053003R081), S.S. salai main -12 cross 1 (053003R083), S.S.salai main -12 cross 2 (053003R084), S.S. salai main -14 (053003R086) Providing CC Road at Singalanthapuram road kamaraj nagar cross 5 (053027R440), Singalanthapuram road kamaraj nagar cross 6 (053027R441), Singalanthapuram road kamaraj nagar cross 7 (053027R442), Singalanthapuram road kamaraj nagar cross 8 (053027R443). | ரூ.29,00,000/– |

மேற்க்காணும் சாலைப் பணிகளின் அவசியம் கருதி, நகராட்சி நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு மேற்க்காணும் சாலைப்பணிகளுக்கு (15CFC Un Tied Grant) 2023– 24 திட்டத்தின்கீழ் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கக் கோரி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு திட்ட முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

சாலைப்பணிகளின் அவசியம் கருதி, நகராட்சி நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு மேற்க்காணும் சாலைப்பணிகளுக்கு (15CFC Un Tied Grant) **2023–24** திட்டத்தின்கீழ் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கக்கோரி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு திட்ட முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(2912/23/இ1)**

**தீர்மானம் எண். 419**

அங்கீகரிக்கப்பட்டது

**( 13 )** இராசிபுரம் நகராட்சியில் மேற்கொள்ளப்படும் கொசுத்தடுப்பு பணிக்குத் தேவையான சாக்கடையில் தெளிக்கும் மருந்து (பாக்டிசைட்) இருப்பில் இல்லை. எனவே அரசு அனுமதித்துள்ள நிறுவனத்தில் அரசு நிர்ணயித்துள்ள விலை விகிதத்தில் வாங்கிக் கொள்ளவும் ஏற்படும் உத்தேச செலவினம் ரூ. 2,50,000/-க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(3305/23/எச்1)**

**தீர்மானம் எண். 420**

அனுமதிக்கப்பட்டது.

**( 14 )** இராசிபுரம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திறந்தவெளியில் மலம் கழிக்காத நகராட்சிக்கான ODF+ சான்று பெறுவதற்கான ஆய்வு நடைபெற்றதால் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து கழிப்பிடங்களுக்கும் தேவையான தளவாடப் பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் அவசர தேவைக்காக தமிழ்நாடு உள்ளாட்சி விதிகள் **2023** பிரிவு **235 (3)** ஷெட்யூல் **3 (F)**–இன்படி நடவடிக்கை மேற்கொண்டு ரூ. **14885/–** (பதினான்காயிரத்து எண்ணூற்று என்பத்தைந்து மட்டும்) செலவினம் மேற்கொள்ளப்பட்டது. மன்றத்தின் பதிவுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(3305 /23/எச்1)**

**தீர்மானம் எண். 421**

அனுமதிக்கப்பட்டது.

**( 15 )** தமிழக அரசின் நிருவாக மானியக் கோரிக்கையில் **2023**-2024-இன்கீழ் இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணியினை மேற்க்கொள்ள நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கை எண். **34**/23-2024-இல் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனடிப்படையில், இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலையத்தின் வார்டு–ஏ, பிளாக்–**6**, நகரளவு எண். **116/1, 2, 3, 118, 119, 120,121, 122, 123,**

124, 125, 126 மற்றும் 127–இல் ரூ. 1000.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை கடிதம் ந.க.எண். 20543/2022/தி–1, நாள் 03.04.2023–இன்படி விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்க நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பிரேரனை அனுப்பியமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பிரேரனை அனுப்பியமைக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(4368/22/இ1)**

**தீர்மானம் எண். 422**

பதிவு செய்யப்பட்டது

**( 16 )** இராசிபுரம் நகராட்சியில் **1975–**ஆம் ஆண்டு கட்டப்பட்ட பழைய பேருந்து நிலையத்தில் உள்ள வார்டு அலுவலகம் (AC Sheet) மற்றும் தங்கும் விடுதிகள் அமைந்துள்ள இடத்தில் புதிய தரைமட்ட நீர் தேக்கத் தொட்டி கட்ட நகராட்சி நிருவாக செயற் பொறியாளர், சேலம் அவர்கள் ந.க.எண். 2225/2023/பி1 கடிதத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ1/1039/23)**

**தீர்மானம் எண். 423**

அனுமதிக்கப்பட்டது.

**(17)** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 9–இல் அமைந்துள்ள வி. நகர் பகுதியிலுள்ள பொதுக்கழிப்பிடம் பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் மிகவும் பழுதடைந்துள்ளதால் மேற்படி கட்டடம் கட்டப்பட்டு 50 ஆண்டுகள் முடிந்துவிட்ட நிலையில் இக்கழிப்பிடத்தை புதுப்பிக்க மிக அதிகப்படியான செலவினமாகும் என்பதாலும், மேற்படி கட்டடத்தை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம். **(இ1/4671/22)**

**தீர்மானம் எண். 424**

அனுமதிக்கப்பட்டது.

**(18)** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட அண்ணா சாலையில் நகராட்சிக்குச் சொந்தமான பள்ளியில் அமைந்துள்ள AC SHEET வகுப்பறை கட்டப்பட்டு 50 ஆண்டுகளான நிலையில் தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் மிகவும் பழுதடைந்துள்ளதால் மேற்ப்படி கட்டடத்தை அப்பள்ளி மாணவர்களின் நலன் கருதி மேற்ப்படி கட்டடத்தை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம். (இ1/4671/22)

**தீர்மானம் எண். 425**

அனுமதிக்கப்பட்டது.

**( 19 )** அரசாணை (நிலை) எண். **98** நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் **13.07.2023–**இல், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர் மன்றத் தலைவர் அவர்களுக்கு ரூ. **15,000/–**, துணைத்தலைவர் அவர்களுக்கு ரூ. **10,000/–** மற்றும் உறுப்பினர்களுக்கு தலா ரூ. **5,000/–** வீதம் மாதந்தோறும் மதிப்பூதியம் ஜுலை **2023** மாதம் முதல் வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(3566/23/டி1)**

**தீர்மானம் எண். 426**

பதிவு செய்யப்பட்டது

ஒம்/– இரா. முனைவர் கவிதா சங்கர்,
**நகர் மன்றத் தலைவர்.**

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி.